வேலூர் மாவட்டக் கல்வி அலுவலரின்(இடைநிலை) செயல்முறைகள்
ந.க.எண் . 2659 /ஆ5/2025 நாள். , 08.2025.

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – தமிழ்நாடு அறிவியல் இயக்கம்- அறிவியல் “விஞ்ஞானத்துளிர்” மாத இதழ் சார்பாக நடத்தப்படும் குழந்தைகள் அறிவியல் மாநாடு – துளிர் வினாடி வினா மற்றும் தேசிய அறிவியல் சார்ந்த நிகழ்வுகள் – பள்ளி மாணவ/மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்- சார்பு. |
| பார்வை | 1. சென்னை-6, தமிழ் நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.051938/எம்2/இ2/2025, , நாள்.07.08.2025.<br>2. வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின்(பொ) செயல்முறைகள் நகஎண்.4057/ஆ5/2025, நாள். 18.08.2025 |

==============

பார்வை 1 மற்றும் 2ல் காணும் செயல்முறைகளுக்கிணங்க பள்ளிகளின் அன்றாட செயல்பாடுகளுக்கு இடையூறின்றி “ தமிழ் நாடு அறிவியல் இயக்கம் “ செயல்பாடுகள் அனைத்தும் பள்ளிக் கல்வித்துறை ஆசிரியர்கள் மற்றும் குழந்தைகளைச் சேர்ந்தே நடைபெற்று வருகிறது. அவ்வகையில் 2025-2026ம் கல்வியாண்டில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள செயல்பாடுகள் பின்வருமாறு.

| வ. எண். | நிகழ்வின் பெயர் | நடைபெற உள்ள மாதங்கள் | |
|---|---|---|---|
| 1 | குழந்தைகள் அறிவியல் மாநாடு | ஆகஸ்ட் – டிசம்பர் 2025 | ஆசிரியர்களுக்கான இணையவழி/ நேரடி கூட்டம் மற்றும் குழந்தைகள் நேரடியாக சந்திக்கும் ஒரு நாள் நிகழ்வு |
| 2 | துளிர்வினாடி வினா மற்றும் திறனறிதல் நேர்வு | ஆகஸ்ட்-அக் டோபர் 2025 | ஒன்றிய/மாவட்ட/மண்டல/மாநில அளவில் ஒரு நாள் நிகழ்வு |
| 3 | வானியல் நிகழ்வு | அக்டோபர் 2025-பிப்ரவரி 2026 | பள்ளி அளவில் ஒரு நாள் மாவட்ட/மாநில அளவில் |
| 4 | தேசிய அறிவியல் தின நிகழ்வுகள் | பிப்ரவரி-2026 | பள்ளி அளவில் ஒரு நாள் மாவட்ட/மாநில அளவில் |
| 5 | அறிவியல் கண்காட்சி /புத்தகக் கண்காட்சி கோளரங்க காட்சிகள் | ஆகஸ்ட்-2025 பிப்ரவரி 2026 | பள்ளி அளவில் /ஒன்றிய அளவில் ஒரு நாள் |
| 6 | கணித அறிவியல் திருவிழக்கள் | ஆகஸ்ட்-2025 பிப்ரவரி-2026 | பள்ளி அளவில் /ஒன்றிய அளவில் /மாவட்ட அளவில் ஒரு நாள் |
| 7 | கணித பயிலரங்குகள்/ பயிற்சிகள் | ஆகஸ்ட்-2025 பிப்ரவரி-2026 | 4 மாவட்டங்கள் அடங்கிய ஒரு மண்டலம் 10 மண்டலங்களில் இரண்டு நாள் ஆசிரியர்களுக்கு |

எனவே, மேற்கண்ட விருப்பமுள்ள பள்ளி மாணவ/மாணவிகள் மற்றும் ஆர்வமுள்ள ஆசிரியர்கள் பங்கேற்கும் வகையில் உரிய விதிமுறைகளை பின்பற்றி பள்ளிகளில் கற்றல் கற்பித்தல் பணிகள் பாதிக்காத வகையில் மாணாக்கர்களின் நலன் பாதிக்காத வகையில் உரிய நவடிக்கை மேற்கொள்ள அரசு /அரசு நிதிஉதவி உயர்/மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

/- ஒப்பம்xxx
மாவட்டக் கல்வி அலுவலர்
(இடைநிலை)
வேலூர்

பெறுநர்
தலைமை ஆசிரியர்கள்
அனைத்து வகை உயர்/மேல்நிலைப் பள்ளிகள்
வேலூர் மாவட்டம்.
நகல்-
வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கு
தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.